III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 04-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's / Husband's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் முதன் முதலில் பிலால்அகமது-வுக்கு பவர் கொடுத்தேன். எனக்கு உரிமையுடைய சொத்தை விற்றுகொடுக்க சொல்லி பவர் கொடுத்தேன். அந்த பவர் பத்திரத்தை வைத்து அவர் யாருக்கு விற்பனை செய்ய விற்பனை ஒப்பந்தம் மேற்கொண்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் மனோவாவிற்கு விற்பனை செய்ய விற்பனை ஒப்பந்தம் எனது அனுமதியோடு மேற்கொண்டார். விற்பனை ஒப்பந்தத்தில் கண்டுள்ள 20 லட்சம் ரூபாய் மொத்த விற்பனை தொகையில் அட்வான்சாக பெறப்பட்ட ரூ.75 ஆயிரத்தை பிலால் அகமது என்னிடம் கொடுத்துவிட்டார். நான் நேரடியாக இந்த கிரைய ஒப்பந்தத்தின் பேரில் மனோவாவிடம் பணம் பெற்றேனா என்றால் ஆமாம் பெற்றேன் ரூ.12, 13 லட்சம் பணம் பெற்றேன். நான் இன்றைய தேதி வரை மனோவாவிற்கு விற்பனை பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தற்பொழுது நான் மனோவாவிற்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க தயாராக இருக்கிறேன். நான் 3 ஆம் பிரதிவாதிக்கு கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாதது என்றால் சரியல்ல. பின்னிட்டு 4, 5 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரங்கள் ஆனது அதற்கு முன்பே பிலால் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் 5 ஆம் பிரதிவாதி சதீசுக்கு 08.04.2011 அன்று ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன். பிலால் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தம் நடப்பில் இருக்கும்பொழுது பின்னிட்டு நான் 5 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் செல்லாது என்றால் சரிதான்.

3 ஆம் பிரதிவாதி பிலாலுக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் அவர் மனோவாவுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தின் படி நான் கிரைய பத்திரம் முடித்து கொடுக்க வேண்டும் என்றால் நான் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க தயாராக இருக்கின்றேன்.

**<u>4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

வாதி மனோவா எனக்கு எதிராக என்ன வழக்கு போட்டிருக்கின்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பத்திரம் பதிவு செய்ய தரக்கோரி எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார். நான் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.29/2013 என்ற வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் ஆமாம் தாக்கல் செய்திருக்கிறேன். என்னை ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்லி தாக்கல் செய்திருக்கின்றேன். என்னிடம் காட்டப்படுகின்ற அசல் வழக்கு எண்.29/2013 ல் தாக்கல் செய்யப்பட்ட வா.த.சா.ஆ.3 ஆவணம் நான் தாக்கல் செய்த ஆவணமா என்றால் இந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ.3 ஆவணமானது 13.09.2012 தேதியிட்ட புகாரின் நகல் என்றால் இதனை நான் செய்யவில்லை துரைராஜ் தான் செய்தார். வா.த.சா.ஆ.3 புகாரில் 2 வது பத்தியில் மனோவா பெயரில் பிலால்அகமது ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தத்தில் 3 மாதத்திற்கு பதிலாக 3 ஆண்டுகள் என்று கால நிர்ணயம் செய்தது எனக்கு பின்னிட்டு தான் தெரியும் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் என்னிடம் நிறைய வெற்றுப்பேப்பரில் துரைராஜ் கையெழுத்து வாங்கியிருக்கின்றார் அதில் ஒன்று தான் இது. இதில் என்ன எழுதியிருக்கின்றது என்று எனக்கு தெரியாது. இந்த புகாரின் 3 வது பத்தியில் பிலால் என்னை ஏமாற்றிவிட்டதாகவும் 5 ஆம் பிரதிவாதி சதீஸ் இதை கேட்டுவிட்டு தாவா சொத்தை 2,40,00,000/-க்கு விற்றுத் தருவதாக கூறினார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சதீசை எனக்கு 08.04.2011 அன்று தான் தெரியும் அதற்கு முன்பாக அவரை எனக்கு தெரியாது. அதே புகாரின் 4 வது பத்தியில் பிலால், சதீஸ், துரைராஜ் ஆகிய மூவரும் சேர்ந்து என்னை கடத்தி வைத்து மிரட்டி தாவா சொத்தை பகுதி பகுதியாக 4 ஆம் பிரதிவாதி துரைராஜ்க்கு கிரையம் செய்து கொடுத்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் இந்த புகார்ஆவணம் வா.த.சா.ஆ.3 இவர்களாக ஏற்படுத்திக் கொண்டது. இதே சங்கதிகளை கொண்டு தான் ஒரு புகாரை சென்னை போலிஸ் கமிசனருக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன் என்றாலும் அந்த ஆவணம் அசல் வழக்கு

எண்.29/2013 வழக்கில் வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கின்றது என்றால் இதனை எல்லாம் துரைராஜ் தான் செய்தார். நான் இவ்வாறு துரைராஜ் தான் ஏற்படுத்தினார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3 ஆம் பிரதிவாதி பிலால்அகமது தாக்கல் செய்திருக்கின்ற பதிலுரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதனை நான் கவனிக்கவில்லை. பிலால்அகமது தாக்கல் செய்திருக்கின்ற பதிலுரையில் தாவா சொத்தை ரூ.2,40,00,000/-க்கு 4 ஆம் பிரதிவாதிக்கு விற்பதற்கு ஒரு பவரை ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்லியிருக்கிறார் என்றால் அப்படி இல்லை இதனை இவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டார். நான் 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்காக அவரோடு செய்து கொண்ட ரூ.2,40,00,000/-ற்கான கிரைய ஒப்பந்தம் செல்லாது என்றும் ரூ.20 லட்சத்திற்கு மனோவாவிடம் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் செல்லும் என்று தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி மனோவா, 3 ஆம் பிரதிவாதி பிலால் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து 4 ஆம் பிரதிவாதி துரைராஜை ஏமாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் அதனை மறுக்கிறேன். நான் அம்பத்தூர் காவல் நிலையத்தில் 02.04.2013 அன்று ஒரு புகார் கொடுத்து அதன் பெயரில் குற்ற எண்.510/2013 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்றால் என்னுடைய வக்கீல் மூலமாக இந்த புகாரை டி2-அம்பத்தூர் காவல்நிலையத்தில் போய் கொடுத்தேன். அந்த புகாரில் பிலால் அகமது தான் 4, 5 பிரதிவாதிகளோடு சேர்ந்து என்னுடைய சொத்தை ஏமாற்றுவதற்கு முயற்சி செய்கின்றார் என்று கொடுத்தேன் என்றால் அப்படி கொடுக்கவில்லை பிலால் என்னை ஏமாற்றுவதாக கொடுக்கவில்லை. சதீஸ், துரைராஜ் தான் ஏமாற்றினார்கள். இந்த புகாரில் இவர்கள் மூன்று பேரும் என்னை அவ்வபொழுது சார்பதிவாளர் அலுவலகம் கூட்டிச் சென்று பத்திரப் பதிவு செய்துகொண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த புகாரில் ஆந்திராவிற்கு கடத்திபோய் வெற்று பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்று கூறப்படவில்லை என்றால் எனக்கு கவனம் இல்லை. நான் இவ்வழக்கிற்காக பொய்யாக தற்பொழுது இவ்வாறு சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் இவர்கள் மூன்று பேர் பெயர்களில் தான் புகார் கொடுத்தேன் என்றால் அதில் பிலால் கிடையாது. 13.11.2012 ல் நான் என்னுடைய வழக்கறிஞர் ஏ.எஸ்.மதிவாணன் அவர்களுக்கு வழக்கு சொத்தில் விற்பனை செய்தது போக மீதமுள்ள 1260 சதுர

அடி நிலத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் கொடுத்திருக்கின்றேன் என்றால் வக்கீல் கையெழுத்து போட சொன்னார் நான் போட்டேன். அதிலுள்ள மேட்டர் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுவது எனது தரப்பில் பி.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அது எப்படி வந்தது என்று என்னுடைய கவனத்தில் இல்லை.

(அறிவார்ந்த 4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).